செ.வெ.எண்: 10 நாள்: 03.02.2017

**<u>புதுக்கோட்டை மாவட்டத்தில் அறிஞர் அண்ணா 48வது நினைவுதின சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.</u>**

புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூரில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அருள்மிகு ஸ்ரீமுத்து மாரியம்மன் திருக்கோயிலில் அறிஞர் அண்ணா 48-வது நினைவு தின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:-

புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பல்வேறு கோயில்கள் செயல்பட்டு வருகிறது. இத்திருக்கோயில்களில் ஒவ்வொரு ஆண்டும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் நினைவு தினவிழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியினை நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இன்று (03.02.2017) அறிஞர் அண்ணா அவர்களின் 48வது நினைவு தினத்தை முன்னிட்டு திருவப்பூர் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பொது விருந்து நிகழ்ச்சியில் அனைத்து பொதுமக்களும் ஜாதி, மதம், மொழி, இன வேறுபாடின்றி கலந்துகொண்டு சமூக நல்லிணக்கத்தைப் பேணிக் காக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆணையர் திரு.ரமேஷ் (புதுக்கோட்டை திருக்கோயில்கள்), மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.மாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**